## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 43/2021 | Date : 15.03.2024 | RW2 |
|---|---|---|
| Name: மணி | S/o.மேகநாதன் | |
| Evidence Recorded Time: 12.55 P.M. to 01.10 P.M. | | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கில் நான் எத்தானவது எதிர்மனுதாரர் என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு என் மீதும் என் ஓனர் மீதும் போட்டிருப்பது தெரியும். நானும் என் ஓனரும் நேரிலோ அல்லது வக்கீல் மூலமாகவோ ஆஜராகி பதில் தாக்கல் செய்யாமல் ஒருதலைபட்சமாகி உள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு சாட்சி சொல்ல வந்த விவரம் தெரியும். இந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்த்து அதை நடத்தாமல் சாட்சி சொல்ல எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவை பொருத்து நான் தோன்றாத்தரப்பினராக இருப்பதால் மனுவில் சொல்லப்பட்ட சங்கதிகளை நான் ஏற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் எ.மா.சா.ஆ.3 ல் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி எ.ம.சா.ஆ.3 ஆவணம் எப்போது எனக்கு கிடைத்தது என்று தெரியுமா என்றால் சரியாக நினைவில்லை. என் ஓனருக்கும் மேற்படி நோட்டீஸ் வந்தது பற்றி என் ஓனர் சொன்னார். அந்த நோட்டீசை நான் பார்த்னோ என்றால் பார்த்தேன். மேற்படி அறிவிப்பில் நான் மற்றும் என் ஓனர் மட்டும் தான் நஷ்டஈடு வழங்க பொறுப்பு என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் ஓனர் என்னை சாட்சி சொல்ல அனுப்பி எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் கொடுக்கவில்லை. என் ஓனருக்காக அவரது கையெழுத்தை எனக்கு தெரியும் என்று சொல்ல எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் ஒரு டாடா ஏசி வண்டியை ஓவர் டேக் செய்யும் போது விபத்து நடந்தது என்று சொல்லியுள்ளேன். அந்த டாடா ஏசியின் வண்டி எண் தெரியுமா என்றால் தெரியாது. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர்கைது செய்துபின்பு ஜாமீனில் வந்தேன் என்றால் சரிதான். நான் தான் விபத்திற்கு காணரம் என்று வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். இன்றுவரை நான்

குற்றம் செய்யவில்லை என்று விபத்தில் இறந்து போனவர் தான் காரணம் என்று புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என் மீது சுமத்திய குற்றம் தவறு என்று சொல்ல நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். குற்றவியல் வழக்கு நடந்து கொண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மனுவில் சொல்லியபடி தான் விபத்து நடந்தது என்றும், விபத்திற்கு நான் தான் முழு காரணம் என்றும், வண்டியை நான் ஓட்டியதால் நாங்கள் கூட்டாகவும், தனியாகவும் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**ஓம்/– RW2**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.